# இன்று பல அரசியல்வாதிகள் வாய்திறந்து பேசுவதில்லை, அவர்களிடம் எதற்கும் பதில் இல்லை!

## ஆர்க்காட்டார் இல்ல மணவிழாவில் — கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

**சென்னை, ஜூன் 19-**

**கழக முன்னாள் பொருளாளர் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் ஆர்க்காடு நா.வீராசாமி அவர்களின் பேரனும், நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமியின் மகனுமான வி.கே.சித்தார்த் - எஸ். ஆஷ்ரயா காயத்ரி இணையரின் திருமண விழா நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்றது. இந்த திருமணத்தை திமுக தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை தாங்கி நடத்தி வைத்தார். அதைத் தொடர்ந்து, மணமக்களை வாழ்த்தி தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி உரையாற்றுகையில் “இன்று பல அரசியல்வாதிகள் வாய் திறந்து பேசுவதில்லை; அவர்களிடம் எதற்கும் பதில் இல்லை” என்று விமர்சித்தார்.**



இம்மணவிழாவில் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பேசியதாவது:-

நம்முடைய அன்பிற்கும், பாசத்திற்கும், மரியாதைக்குரிய ஆர்க்காடு வீராசாமி இல்ல திருமணத்தை நடத்தி வைத்திருக்கக்கூடிய நம்முடைய கழகத்தின் தலைவர் தமிழ் மக்களின் மனங்களில் எல்லாம் என்றென்றும் முதல்வராக வீற்றிருக்கக் கூடியவர். இந்த இல்ல திருமணத்தில் கலந்து கொள்வது என்பது நம் அத்தனை பேருக்கும் பெருமை தரக்கூடிய ஒன்று என எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் குறிப்பிட்டார். தன்னுடைய வாழ்நாள் முழுவதும் கொண்ட தலைவனும் ,கொள்கையும் ஒன்றே என்று இருக்கக்கூடிய ஒரு குடும்பத்தின் திருமணத்திலே கலந்து கொள்வதிலே மட்டற்ற பெருமையும்,மகிழ்ச்சியும் கொள்கிறோம்.

**கலைஞரையும் ஆர்க்காட்டாரையும் பிரிக்க முடியாது!**

நமது தலைவர் கலைஞரும், அண்ணன் ஆற்காட்டார் அவர்களும் ஒருவர் இன்னொருவரை விட்டுவிட்டு பார்க்க முடியாது என்று சொல்லக் கூடிய அளவுக்கு காலை முதல் மாலை வரை ஒன்றாக இருக்கக்கூடியவர்கள். அதே நேரத்தில், கழகத்தில் இருக்கக்கூடிய கடைகோடி தொண்டன் வரை அவரை அணுகலாம், அவரோடு பேசலாம் எந்த உதவியாக இருந்தாலும் செய்ய முடியுமோ செய்ய முடியவில்லையோ நான் இருக்கிறேன் என்று அன்பான வார்த்தைகளால் அரவணைக்கக்கூடிய ஒரு தலைவராக விளங்கியவர் ஆர்காட்டார்.

**என்றைக்கு பேசுவார்கள்?**

அவருடைய வழியிலேயே இன்று கலாநிதி அவர்களும், அதே அரவணைக்கக் கூடிய தன்மையோடு, நம்முடைய இயக்கத்தை சார்ந்தவர்களாக இருக்கட்டும் அல்லது மாற்று இயக்கங்களை சார்ந்தவர்களாக இருக்கட்டும் அத்தனை பேரிடமும் அன்பை பெற்றிருக்க கூடிய ஒருவர் என்றால் அது டாக்டர் கலாநிதி வீராசாமி.

இன்றைக்கு பல அரசியல்வாதிகள் வாய் திறந்து பேசுவது கிடையாது. இவர்கள் என்றைக்கு பேசுவார்களோ என்று காத்திருக்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. எதற்கும் பேசுறதும் இல்லை, பதிலும் இல்லை. அப்படி பேசினாலும் பேசாமலேயே இருந்திருக்கலாம் என நினைக்கும் அளவிற்கு இருக்கிறது.

**எல்லா துறைகள் பற்றியும் பேசக் கூடியவர் கலாநிதி!**

ஆனால், அப்படிப்பட்ட அரசியல் தலைவர்களை பார்க்கக்கூடிய நேரத்தில், நம்முடைய கலாநிதி நாடாளுமன்றத்தில் ஒரு சப்ஜெக்ட் இருந்தும், யாரும் பேசுறதுக்கு முன்வரவில்லை என்றால் கடைசி நிமிஷமாக இருந்தாலும் கூட கொஞ்சம் பேசுறீங்களான்னு கேட்டால்? எதை பற்றியாக இருந்தாலும் இந்த உலகத்திலே எல்லா சப்ஜெக்ட்லையும் பேசக்கூடிய ஒரு வல்லுனராக இருக்கக்கூடிய பெருமை டாக்டர் கலாநிதிக்கு உண்டு.

எந்த தலைப்பாக இருந்தாலும், நம்முடைய கழகத்தின் கொள்கைகளை கருத்துக்களை அங்கே வலிமையாக பேசுவர். அதே நேரத்தில், யாரும் முகம் சுழிக்காத வகையிலே பேசக் கூடிய ஒருவர்தான் டாக்டர் கலாநிதி. கழகத்தின் பணிகளில் பற்றோடு இருக்கக்கூடிய ஒருவருடைய இல்லத் திருமணத்தை கலந்து கொள்வதில் எல்லோருமே பெருமை அடைகிறோம்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. பேசினார்.

---

### முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்த நாளை முன்னிட்டு

## திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க மற்றும் மாவட்ட மாணவர் அணி சார்பில் கருத்தரங்கம்!

### மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிக்கை!

திருப்பூர், ஜூன். 19-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க மற்றும் மாவட்ட மாணவர் அணி சார்பில் கருத்தரங்கம் மாவட்டச் செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4-ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன் அறிக்கை விடுத்துள்ளார்.



அவரது அறிக்கை வருமாறு :- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.க மற்றும் மாவட்ட மாணவர் அணி சார்பில் கருத்தரங்கம் இன்று (19.06.2026- வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணியளவில் திருப்பூர் தாராபுரம் சாலையில் அமைந்துள்ள மாவட்ட கழக அலுவலகம் “கலைஞர் அறிவாலயம்” “தளபதி அரங்கத்தில்” மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் ஆகிய எனது தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் திருப்பூர் மகிழவன் கருத்துரையாற்றுகிறார். கழக துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், கழக இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், கழக மாணவர் அணி செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி, கழக மாணவர் அணி துணை செயலாளர் வீ.ஜீ. கோகுல் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

அதுசமயம் திருப்பூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கல்லூரி மாணவர்களை கலந்து கொள்ள செய்து விழாவை சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

### தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில்

## மேலகரம் பேரூர் பகுதி 2 இடங்களில் தலா ரூபாய் 4.30 லட்சத்தில் உயர் கோபுர மின்விளக்கு!

### ஜீவானந்தம் தலைமை! வே.ஜெயபாலன் - மரு.ராணி ஸ்ரீ குமார் எம்.பி. - கலை கதிரவன் எம்.எல்.ஏ.பங்கேற்பு!

தென்காசி, ஜூன் 19-

தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மேலகரம் பேரூராட்சி பகுதியான தெப்பக்குளம் மற்றும் எழில் நகர் ஆகிய 2 இடங்களில் தலா 4.30 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட உயர் மின் கோபுர விளக்கு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு துவக்கி வைக்கப்பட்டது.இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார்,தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் ஆகியோர் பங்கேற்றனர்.

தென்காசி மாவட்டம் மேலகரம் பேரூர் பகுதிகளான தெப்பக்குளம், எழில்நகர் ஆகிய 2 இடங்களில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அமைக்கப்பட்டிருந்த உயர் கோபுர மின் விளக்கு துவக்க விழா நிகழ்வு மேலகரம் பேரூர் துணைச் செயலாளரும்,பேரூராட்சி மன்ற துணைத் தலைவருமான ஜீவானந்தம் தலைமையில் பேரூராட்சி மன்ற தலைவர் வேணிவீரபாண்டியன், கவுன்சிலர்கள் கபிலன், மகேஸ்வரன், செயல் அலுவலர் அமானுல்லா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு.ராணி ஸ்ரீகுமார், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் மரு.கலை கதிரவன் ஆகியோர் பங்கேற்று உயர் மின் கோபுர விளக்கை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தனர். நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் அழகு சுந்தரம், கவுன்சில ர்கள் பூமா, சம்முகுட்டி,தங்கம்மாள்,சிங்கதுரை, முன்னாள் மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் வேலு ச்சாமி,

வர்த்தக அணி முத்துக் குமார், மாணவரணி மஹ்முதா,கதிர், சலீம், ரமேஷ், நன்னை பாலு, யாகவா சுந்தர், வீரபாண்டி, கல்யாணசுந்தரம், கணேசன்,முருகன்,வீரபாண்டியன், அருண்,பகவதி ராஜ், கபீர் ஷெரீப், மனோகரன்,பொரோஸ்கான், ஆயிரப்பேரி முத்துவேல்,ஜிம் ஜெய்சங்கர்,சந்திரன், சுப்பிரமணியன், பிரவீன் உட்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

---

### திருவள்ளூர் அருகே தொடர் மின்வெட்டால் கொதித்த மக்கள் —

## 4 மணி நேரம் தேசிய நெடுஞ்சாலையில் அமர்ந்து சாலை மறியல்!

### த.வெ.க. ஆட்சியில் அடிப்படைச் சேவைகளே முடங்கிவிட்டதாக பொதுமக்கள் கடும் குற்றச்சாட்டு!

திருவள்ளூர், ஜூன் 19-

திருவள்ளூர் மாவட்டம் மப்பேடு ஊராட்சிக்குட்பட்ட காந்திபேட்டை பகுதியில் கடந்த ஒரு மாதமாக நீடித்து வரும் குறைந்த மின்னழுத்தம் மற்றும் அடிக்கடி ஏற்படும் அறிவிக்கப்படாத மின் வெட்டால் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இதனைத் தொடர்ந்து ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் பூந்தமல்லி - அரக்கோணம் நெடுஞ்சாலையில் அமர்ந்து சுமார் 4 மணி நேரம் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு நிலவியது.



காந்திபேட்டை பகுதியில் சுமார் 600க்கும் மேற்பட்ட குடியிருப்புகளில் 2,000க்கும் அதிகமான மக்கள் வசித்து வருகின்றனர். கடந்த ஒரு மாதமாக அப்பகுதியில் மின்விநியோகம் மிகவும் சீர்குலைந்துள்ளதாகவும், பகல் மற்றும் இரவு நேரங்களில் அடிக்கடி மின்வெட்டு ஏற்படுவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

கைகுழந்தைகளை பராமரிக்கும் தாய்மார்கள், கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள் ஆகியோர் இரவு முழுவதும் தூக்கமின்றி கடும் சிரமத்திற்கு ஆளாகி வருவதாகவும், மின் மோட்டார்கள் இயங்காததால் குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டு அத்தியாவசிய தேவைகளுக்கே தண்ணீர் கிடைக்காமல் மக்கள் தவித்து வருவதாகவும் குற்றம்சாட்டினர்.

மேலும், பள்ளி மாணவர்கள் போதிய வெளிச்சமின்றி படிக்க முடியாமல் தவிப்பதாகவும், தேர்வு மற்றும் கல்வி பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பெற்றோர்கள் வேதனை தெரிவித்தனர். மின்சார வாரிய அதிகாரிகளிடம் பலமுறை புகார் அளித்தும் நிரந்தர தீர்வு கிடைக்கவில்லை என்றும், புகார் தெரிவிக்கும் நபர்களின் தொலைபேசி எண்களையே தடை செய்து விடுகின்றனர் என்ற குற்றச்சாட்டையும் பொதுமக்கள் முன்வைத்தனர். அதே நேரத்தில், அப்பகுதியில் செயல்படும் தொழிற்சாலைகளுக்கு எந்தவித மின் தடையும் இன்றி 24 மணி நேரமும் சீரான மின்சாரம் வழங்கப்படுவதாகவும், ஆனால் குடியிருப்பு பகுதிகள் முற்றிலும் புறக்கணிக்கப்படுவதாகவும் மக்கள் வேதனையுடன் கூறினர்.

இந்தப் பிரச்சினை தொடர்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மின்வாரியம் மற்றும் ஊராட்சி நிர்வாகத்திற்கு பலமுறை மனுக்கள் அளிக்கப்பட்டும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டி னர்.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள் நேற்று இரவு பூந்தமல்லி - அரக்கோணம் நெடுஞ்சாலையில் அமர்ந்து திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக இருபுறமும் நூற்றுக்கணக்கான வாகனங்கள் நீண்ட வரிசையில் நின்று போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

இந்நிலையில், திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த சில நாட்களாக அறிவிக்கப்படாத மின்வெட்டு, குறைந்த மின்னழுத்தம் போன்ற பிரச்சினைகள் தொடர்ந்து ஏற்பட்டு வருவதாக பொதுமக்கள் புகார் தெரிவித்து வருகின்றனர். இதனால் பல இடங்களில் சாலை மறியல், மின்வாரிய அலுவலக முற்றுகை உள்ளிட்ட போராட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து பொதுமக்கள் கடும் கண்டனம் தெரிவித்தனர் “த.வெ.க. ஆட்சியில் சட்டம்ஒழுங்கு மட்டுமல்ல, மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட அடிப்படை சேவைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலைகளுக்கு தடையின்றி மின்சாரம் வழங்கப்பட்டாலும், பொதுமக்களின் தேவைகள் புறக்கணிக்கப்படுகின்றன என்ற குற்றச்சாட்டுகள் கவலைக்குரியவை. மக்கள் பலமுறை புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்காததால், நெடுஞ்சாலையில் அமர்ந்து போராட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இது நிர்வாகத் தோல்விக்கான வெளிப்படையான சான்று. பொதுமக்க ளின் அடிப்படை தேவைகளை கூட நிறைவேற்ற முடியாத ஆட்சிக்கு மக்கள் விரைவில் தக்க பதிலளிப்பார்கள்” என்று தெரிவித்துள்ளனர்.

---

### கே.கே.கருப்புசாமி கோட்டையப்பன் ஏற்பாடு! நெல்லை மாநகர இளைஞரணி சார்பில்

## கலைஞர் 103 வது பிறந்தநாள் விழா-100 ஆட்டோ தொழிலாளர்களுக்கு சீருடை!

### என்.மாலை ராஜா முன்னிலை! நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.பங்கேற்பு !

நெல்லை. ஜூன் 19-

நெல்லை மாநகர இளைஞரணி சார்பில் மாநகர இளைஞரணி அமைப்பாளர் கே.கே. கருப்பசாமி கோட்டையப்பன் ஏற்பாட்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 103 வது பிறந்தநாள் விழா முன்னிட்டு 100 ஆட்டோ தொழிலாளர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வு பாளை என்.ஜி.ஓ.காலனி ஆர்சி சர்ச் அருகில் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் என்.மாலை ராஜா முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் பங்கேற்று ஆட்டோ தொழிலாளர்களுக்கு சீருடை வழங்கினார்.

நிகழ்வில் நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ்,மாவட்ட துணை செயலாளர் எஸ். வி.சுரேஷ், மேலப்பாளையம் பகுதி பொறுப்பாளர்5 துபாய் சாகுல்,சாமுவேல், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனித்தா, மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மீரான் மைதீன், மிக்கேல்,குரு ஜெசி,வழக்கறிஞரணி துணை அமைப்பாளர் அஜிஸ், வட்டச் செயலாளர்கள் வினோத்குமார், பாலா, இம்மானுவேல்,முப்படாதி,பெருமாள், மற்றும் இளைஞரணி நிர்வாகிகள் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை நெல்லை மாநகர இளைஞரணி அமைப்பாளர், மாமன்ற உறுப்பினர் கே.கே.கருப்பசாமி கோட்டையப்பன் செய்திருந்தார்.



ஆனைமலை தாலுகா அலுவலகத்தில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் சங்கீதா தலைமையில் நடைபெற்ற ஜமாபந்தி மக்கள் குறை கேட்கும் முகாமில் பொதுமக்களிடம் குறைகளை கேட்டு அறிந்த வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் குட்டி (எ) ஆ.சுதாகர் ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் அரசு அதிகாரிகளிடம் பொது மக்களுடைய மனுக்களின் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தினார். இதில் ஆனைமலை கிழக்கு ஒன்றிய செயலாளர் டி.யுவராஜ், மத்திய ஒன்றிய பொறுப்பாளர் எஸ்.ஆர்.அண்ணாதுரை, கே.வி.பால்ராஜ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம், உடுமலைப்பேட்டை மற்றும் குடிமங்கலம் வட்டாரங்களுக்குட்பட்ட கிராம ஊராட்சிகளில் ஏற்பட்டு வரும் குடிநீர் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர், திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி, மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் ஆகியோர் திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரேயிடம் கோரிக்கை மனு அளித்தனர்.